முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2024-02-10
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) பொது நோக்க நிதிக் கூற்றுகளின் நோக்கம் உரிமத்திற்கு (Entity) வளங்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் நாட்டதாரர்களுக்கு பயனுள்ளதாக இருக்கக்கூடிய அறிக்கையிடல் உரிமம் பற்றிய நிதிசார் தகவல்களை வழங்குவதாகும். நிதிசார் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற தரம்சார் பண்புகள் (qualitative characteristics) காணப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நிதிசார் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற இரண்டு (02) தரம்சார் பண்புகளை **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(b) உரிமமானது பொருத்தமான மூலதன எண்ணக்கருவை தெரிவுசெய்வது அதனது நிதிக் கூற்றுக்களின் பயனர்களது தேவைகளின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மூலதனப் பேணுகையின் இரண்டு (02) முதன்மையான வகைகளை (primary types) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையும் பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவும் குறிப்பிட்ட வணிக உரிமங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் இரண்டு (02) அதிகாரங்களைக் (powers) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் மூன்று (03) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

தற்கால வணிக உலகில், நிதிசார் தகவல்களும் அதேபோன்று நிதிசாரா தகவல்களும் அதன் நாட்டதாரர்களால் தீர்மானங்கள் மதிப்பீடு செய்யப்படும்போது முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. இடர்கள் மற்றும் வாய்ப்புகளும் தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடும் வணிகத்தின் தொடர்ச்சித்தன்மையை நிலைபேறானதாக வைத்திருப்பதில் முக்கியமானதாகவும் ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் வெளிப்படுத்தலுக்குத் தேவையானதாகவும் இருக்கின்ற இரண்டு பிரதான கூறுகள் (elements) ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பட்டியலிடப்பட்ட உரிமமொன்றின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்ற இரண்டு (02) நிதிசாரா அறிக்கைகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையில் தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீட்டின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) பிரதான பகுதிகளைக் (key areas) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

(a) ஓர் உரிமம் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை தாபிக்க முடிந்தால் மட்டுமே அபிவிருத்தியில் இருந்து எழுகின்ற அருவச் சொத்தொன்று ஏற்பிசைவு செய்யப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 38 – அருவச் சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, அபிவிருத்திக் கிரயத்தை ஒரு அருவச் சொத்தாக மூலதனப்படுத்தும் பொருட்டு திருப்திப்படுத்தப்பட வேண்டிய இரண்டு (02) நிபந்தனைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட என்றிச் கம்பனி** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் உள்நாட்டுச் சந்தைக்காக ஒரு புதிய துரித உணவு வகையைத் தயாரித்திருந்ததுடன் 2023 ஏப்ரலில் அதன் வர்த்தக ரீதியான செயற்பாட்டை ஆரம்பித்திருந்தது. 2022/23 ஆண்டின் காலப்பகுதியில் புதிய பொருளுக்காக செலவிடப்பட்ட கிரயங்கள் கீழ்வருமாறு :

(1) புதிய பொருளுக்கான சந்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூபா 500,000/- செலவிடப்பட்டது.

(2) கம்பனியானது ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 300,000/- இனைச் செலவுசெய்து புதிய பொருளுக்கான காப்புரிமையைப் பெற்றுக்கொண்டது.

(3) புதிய பொருளை தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்த ரூபா 300,000/- செலவிடப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 38 – அருவச் சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, மேற்படி ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவ*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட வின்கோ (தனியார்) கம்பனியின்** 2023 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 ஆகிய திகதிகளில் உள்ள நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட வின்கோ (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2023 | 2022 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8,500 | 6,500 |
| கழி: திரண்ட தேய்மானம் | (1,300) | (1,000) |
| **முன்கொணரற் பெறுமதி** | **7,200** | **5,500** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 1,950 | 2,300 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 2,090 | 1,680 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,115 | 1,680 |
| | **6,155** | **5,660** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **13,355** | **11,160** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (80,000 சாதாரண பங்குகள்) | 8,000 | 8,000 |
| கைக்கொள் இலாபம் | 935 | 560 |
| | **8,935** | **8,560** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 900 | 780 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 490 | 420 |
| | **1,390** | **1,200** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 2,530 | 1,010 |
| குறுங்காலக் கடன்கள் | 180 | 180 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 320 | 210 |
| | **3,030** | **1,400** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **13,355** | **11,160** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள் ரூபா 230,000/-.

(2) 2022 ஏப்ரல் 01 ஆந் திகதி கம்பனியானது கிரயம் ரூபா 1,200,000/- பெறுமதியான அதன் மோட்டார் வாகனமொன்றை ரூபா 600,000/- இற்கு விற்பனை செய்தது. விற்பனைத் திகதியில் திரண்ட தேய்மானம் ரூபா 500,000/-. இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு மேலதிகமாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காணப்படக்கூடிய வித்தியாசமானது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காணி ஒன்றின் கொள்வனவைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது.

(3) ஆண்டிற்கான, கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூபா 250,000/- ஆக இருந்ததுடன் அது ஆண்டின் காலப்பகுதியிலேயே செலுத்தப்பட்டது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 160,000/- இறுதிப் பங்கிலாபத்தைச் செலுத்தியது.

(5) 2023 மார்ச் 31 இல், **ABC வங்கியானது** ரூபா 500,000/- நீண்ட காலக் கடனை கம்பனிக்கு வழங்கியிருந்தது.

(6) ஆண்டின் காலப்பகுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நேரில் முறையைப் பயன்படுத்தி 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட வின்கோ (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(a) **வரையறுக்கப்பட்ட சண்சைன் கம்பனி** 2022 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 3 மில்லியனை முற்பணமாகச் செலுத்தி ரூபா 8 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்ததுடன் மீதித் தொகைக்கு அதே நாளில் **ABC வங்கியிடமிருந்து** நிதிக் குத்தகை வசதியையும் பெற்றுக் கொண்டது. நிதிக் குத்தகை தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்கு தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | 4 ஆண்டுகள் |
| உள்ளார்ந்த வட்டி வீதம் | ஆண்டிற்கு 18% |
| வருடாந்த குத்தகைத் தவணைக் கொடுப்பனவு | ரூபா 1,858,736/- |

குத்தகைத் தவணைக் கொடுப்பனவானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செலுத்தப்படுவதுடன் சொத்தின் உரிமையானது குத்தகைக் கால முடிவில் **வரையறுக்கப்பட்ட சண்சைன் கம்பனிக்கு** மாற்றப்படுகிறது. குத்தகையின் முதலாவது தவணைக் கொடுப்பனவு 2023 மார்ச் 31 இல் கம்பனியால் செலுத்தப்பட்டது. மோட்டார் வாகனத்தின் பயன்தரும் ஆயுள்காலம் 4 ஆண்டுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இந்தக் குத்தகையுடன் தொடர்புடைய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றினதும் 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்றினதும் பிரித்தெடுப்புகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ஸ்பேஸ் எயார் கம்பனி** என்பது புதிதாகத் தாபிக்கப்பட்ட ஒரு எயார்லைன் கம்பனியாகும். இது தனது வர்த்தகச் செயற்பாடுகளுக்காக ஒரு பயணிகள் விமானத்தை கொள்வனவு செய்துள்ளது. 2022 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட விமானத்தின் கிரயம் ரூபா 1,200 மில்லியன் ஆகும். விமானமானது என்ஜின்கள், தரையிறக்கல் ஆளி மற்றும் விமானச் சட்டகம் என 03 பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பகுதியினதும் கிரயம், பயன்தரும் ஆயுட்கால முடிவிலுள்ள ஒடிவுப் பெறுமதி மற்றும் பயன்தரும் ஆயுட்காலம் என்பன கீழே தரப்பட்டுள்ளன :

| பகுதி | மொத்தக் கிரயத்தின் % | ஒடிவுப் பெறுமதி (ரூபா மில்லியன்) | பயன்தரும் ஆயுட்காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| என்ஜின்கள் | 50% | 100 | 10 |
| தரையிறக்கல் ஆளி | 20% | 40 | 5 |
| விமானச் சட்டகம் | 30% | 60 | 20 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

விமானத்தின் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த தேய்மானக் கட்டணத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட சினோ கம்பனி** என்பது கனிம வளத்தைப் பிரித்தெடுக்கின்ற ஒரு கம்பனி ஆகும். **வரையறுக்கப்பட்ட சினோ கம்பனியின்** கணக்காளர் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் கீழ்வரும் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதைக் கண்டறிந்துள்ளார். இவை 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் கவனத்திற் கொள்ளப்பட வில்லை :

(1) 2022 மே மாதம் கம்பனியின் ஊழியர் ஒருவர் பணியில் இருந்தபோது உபகரணமொன்று செயலிழந்ததன் காரணமாக காயமடைந்திருந்தார். அவர் தனக்கு ஏற்பட்ட சேதத்திற்கு ரூபா 5 மில்லியன் இழப்பீடு கோரி கம்பனி மீது வழக்குத் தொடுத்திருந்தார். கம்பனி இழப்பீட்டை முழுமையாக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாக கம்பனியின் வழக்கறிஞர்கள் கருதியிருந்தனர். இறுதியாக, நீதிமன்றம் 2023 மே 31 ஆந் திகதி ரூபா 3 மில்லியனை வழங்குமாறு கட்டளையிட்டிருந்தது.

(2) அதே நேரத்தில், **வரையறுக்கப்பட்ட சினோ கம்பனி** ரூபா 9 மில்லியனை இழப்பீடாக் கோரி உபகரண வழங்குநருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தது. கம்பனியின் வழக்கறிஞர்கள் வெற்றிபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவும் ரூபா 9 மில்லியனை இழப்பீடாகப் பெறலாம் எனவும் நம்புகின்றனர். 2023 யூன் 15 ஆந் திகதி வரை இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படவில்லை.

(3) 2023 மார்ச் மாத இறுதியில், **வரையறுக்கப்பட்ட சினோ கம்பனி** ஒரு புதிய கனிம வளப் பகுதியில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறது. செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதன் ஒரு பகுதியாக, தளத் தயார்படுத்தல்களை அகற்றுதல் மற்றும் அகழ்வு செய்யப்பட்ட பகுதிகளை நிரப்புதல் போன்றவற்றுக்கான சட்டபூர்வ கடப்பாட்டைக் கம்பனி கொண்டிருக்கிறது. இந்தக் கடப்பாடானது ரூபா 100 மில்லியன் இற்றைப் பெறுமதியைக் கொண்டிருக்கிறது.

நிதிக் கூற்றுகள் 2023 யூன் 15 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது எனக் கருதுக.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமத்தின்படி, **வரையறுக்கப்பட்ட சினோ கம்பனியின்** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது மேற்படி விவரணங்களின் தாக்கத்தை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

(b) SLFRS 15 – வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் என்ற நியமத்தின்படி, வருமானத்தை ஏற்பிசைவு செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய ஐந்து படிநிலை மாதிரியில் (five steps model) காணப்படும் படிநிலைகளை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவ*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதியானது 2023 மார்ச் 31 இலான **குளோபல் பீ.எல்.சீ.** இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**குளோபல் பீ.எல்.சீ.**

**2023 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---:|---:|
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் / மீள்மதிப்பீட்டுத் தொகையில் :** | | |
| காணி – மீள்மதிப்பீட்டுத் தொகையில் (கிரயம் - ரூபா 35 மில்லியன்) | 40,000 | |
| கட்டடம் | 55,000 | |
| இயந்திரம் | 28,000 | |
| மூலதனப் புத்துருவாகும் வேலைகள் | 14,000 | |
| **திரண்ட தேய்மானம் - 2022 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 14,000 |
| இயந்திரம் | | 12,000 |
| தொக்கு - 2023 மார்ச் 31 இல் - கிரயத்தில் | 24,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 10,250 | 6,500 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 16,150 | |
| 2022 ஏப்ரல் 01 இல் ஐயக் கடன் ஏற்பாடு | | 2,900 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | | 8,500 |
| அட்டுறு செலவினங்கள் | | 8,000 |
| செலுத்திய வருமான வரி | 12,400 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 116,000 | 206,000 |
| பிற வருமானங்கள் | | 6,400 |
| 2022 மார்ச் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 8,100 |
| வங்கிக் கடன் | | 9,000 |
| நிருவாகச் செலவினங்கள் | 40,000 | |
| விநியோகச் செலவினங்கள் | 37,000 | |
| நிதிச் செலவினங்கள் | 1,100 | |
| குறிப்பிடு மூலதனம் (10,000,000 சாதாரண பங்குகள்) | | 95,000 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 5,000 |
| 2022 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 12,500 |
| | **393,900** | **393,900** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் இறுதியில் உள்ள தொக்கானது ரூபா 1,200,000/- கிரயமான மெதுவாக நகரும் தொக்குகளை உள்ளடக்கியிருப்பதை ஆண்டிறுதியில் பௌதிக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தொக்குக் கணக்கெடுப்பானது வெளிப்படுத்தியது. இந்தத் தொக்கு 2023 ஏப்ரல் 12 ஆந் திகதி வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 800,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 05 ஆண்டுகள் |

(3) 2023 மார்ச் 31 இல், கம்பனியானது இயந்திரத்திற்கான சேத இழப்பு சோதனையை (impairment test) மேற்கொண்டதுடன் அதில் பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் சீர் மதிப்பு கழித்த விற்பனைக் கிரயம் (fair value less cost of disposal) என்பன முறையே ரூபா 8,400,000/- மற்றும் ரூபா 9,000,000/- ஆகும். இந்த சேத இழப்பு பற்றி கணக்கேடுகளில் எவ்வித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

(4) காணியானது ஆரம்பத்தில் 2020/21 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அது மீண்டும் கம்பனியால் 2023 மார்ச் 31 இல் ரூபா 43,000,000/- இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(5) கம்பனியானது உணவு செயன்முறைப்படுத்தல் தொழிற்சாலை ஒன்றை நிருமாணிப்பதற்காக 2022 யூன் 01 இல் 8% வருடாந்த வட்டியில் ரூபா 9,000,000/- வங்கிக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டது. தொழிற்சாலையின் நிருமாணம் 2022 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது 2023 மார்ச் 31 இல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிருமாணம் தொடர்பில் ஆண்டின் காலப்பகுதியில் செலவு செய்யப்பட்ட கிரயம் ஆனது மூலதன புத்துருவாகும் வேலை கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டது. ஆண்டிற்கான, கடன் மீதான வட்டியானது நிதிச் செலவினங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது. வங்கியானது மூலதன மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு 2 ஆண்டுகள் சலுகைக் காலத்தை வழங்கியிருந்தது.

(6) ஆண்டின் காலப்பகுதியில், அறவிடமுடியாக் கடன் ரூபா 600,000/- இனை கம்பனி வசூலித்திருந்தது. இது முன்னர் 2021 மார்ச் இல் விநியோகச் செலவினங்களுக்கு பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்ததாகும். கிடைக்கப்பெற்ற தொகை வியாபார வருமதிகள் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டது. கம்பனியின் மற்றுமொரு வாடிக்கையாளர் வங்குரோத்து நிலையை அடைந்ததால் கம்பனி அவரிடமிருந்து வரவேண்டியிருந்த ரூபா 250,000/- இனை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்குத் தீர்மானித்தது. ஆயினும் இது தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. மேலும், 2023 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியின் 5% இல் ஐயக்கடன் ஏற்பாட்டைப் பேணுவதற்கு முகாமையால் தீர்மானிக்கப்பட்டது.

(7) 2022/23 ஆண்டின் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற முதலீட்டு வருமானம் ரூபா 1,200,000/- ஆனது பிற வருமானங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 2023 மார்ச் மாதத்துடன் தொடர்புடைய முதலீட்டு வருமானம் ரூபா 400,000/- ஆனது 2023 ஏப்ரலில் கிடைக்கப்பெற்றது. இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(8) 2022 மார்ச் 31 இல் அட்டுறுவாக இருந்த வருமான வரிப் பரிப்பு ரூபா 8,100,000/- என்பதுடன் வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 9,250,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரிக் கொடுப்பனவுகள் “செலுத்திய வருமான வரி” கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டது.

(9) நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபை அவற்றை 2023 மே 31 இல் அங்கீகரித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில் **குளோபல் பீ.எல்.சீ.** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

2023 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **ஜயலங்கா பீ.எல்.சீ.** இன் முற்றடக்க வருமானக் கூற்றுகளின் பிரித்தெடுப்பும் 2023 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுகளின் பிரித்தெடுப்பும் கீழே தரப்பட்டுள்ளன :

**ஜயலங்கா பீ.எல்.சீ.**
**வருமானக் கூற்றுகளிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2023** | **2022** |
|---|---|---|
| புரள்வு (turnover) | 683,700 | 487,900 |
| விற்பனைக் கிரயம் | (321,800) | (286,700) |
| வட்டிச் செலவினங்கள் | (7,540) | (6,280) |
| ஆண்டிற்கான வருமான வரி | (3,800) | (4,250) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 36,450 | 19,820 |

**ஜயலங்கா பீ.எல்.சீ.**
**நிதி நிலைக் கூற்றுகளிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **2023** | **2022** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 141,500 | 119,800 |
| வியாபார சென்மதிகள் | 45,720 | 110,910 |
| தொக்கு | 81,400 | 79,600 |
| விநியோகத்திலுள்ள பங்குகளது எண்ணிக்கையின் நிறையேற்றப்பட்ட சராசரி ('000) | 8,500 | 8,500 |

கீழ்வரும் மேலதிக தகவல்களையும் கவனத்திற் கொள்க :

(1) மொத்தப் புரள்வில் 60% ஆனவை கடன் விற்பனை மூலமானவை ஆகும்.

(2) 90% ஆன கொள்வனவுகள் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை ஆகும்.

(3) பங்கொன்றின் சந்தை விலை ரூபா 20/-.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2023 மார்ச் 31 இலான / இல் முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் விகிதங்களைக் **கணிப்பிடுக** :

(i) நிகர இலாப விகிதம் (Net Profit Ratio).

(ii) தொக்கு இருப்புக் காலம் (Stock Residence Period).

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (Debtors' Collection Period).

(iv) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் (Creditors' Settlement Period).

(v) பங்கொன்றின் வருவாய் (Earnings Per Share).

(vi) விலை வருவாய் விகிதம் (Price Earning Ratio). (06 புள்ளிகள்)

(b) ***ஜயலங்கா பீ.எல்.சீ.*** தொழிற்படுகின்ற துறையின் தொழிற்றுறைச் சராசரிகள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| நிகர இலாப விகிதம் | 10% |
| தொக்கு இருப்புக் காலம் | 90 நாட்கள் |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 65 நாட்கள் |
| கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் | 73 நாட்கள் |
| பங்கொன்றின் வருவாய் | ரூபா 7.50 |
| விலை வருவாய் விகிதம் | 2.67 மடங்கு |

***ஜயலங்கா பீ.எல்.சீ.*** இன் மேற்படி விகிதங்களை தொழிற்றுறைச் சராசரிகளுடன் ஒப்பிட்டு, முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை விளக்கி, பொழிப்பு அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## வினா 10

***தோமஸ் பீ.எல்.சீ.*** ஆனது 2022 ஏப்ரல் 01 இல் ரூபா 350 மில்லியனுக்கு ***கோமஸ் பீ.எல்.சீ.*** இன் 80% ஆன சாதாரண பங்கு மூலதனத்தை கையகப்படுத்தியது.

2023 மார்ச் 31 இலான ***தோமஸ் பீ.எல்.சீ.*** மற்றும் ***கோமஸ் பீ.எல்.சீ.*** இன் நிதி நிலைக் கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன :

***நிதி நிலைக் கூற்றுகள்*** *(ரூபா '000)*

| | **தோமஸ் பீ.எல்.சீ.** | **கோமஸ் பீ.எல்.சீ.** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 540,000 | 240,000 |
| **கோமஸ் பீ.எல்.சீ.** இல் முதலீடு | 350,000 | - |
| **கோமஸ் பீ.எல்.சீ.** இன் தனிச்சங்களில் முதலீடு | 40,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 117,000 | 150,000 |
| வியாபார மற்றும் பிற வருமதிகள் | 180,000 | 90,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 18,000 | 90,000 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,245,000** | **570,000** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 700,000 | 300,000 |
| கைக்கொள் இலாபம் | 225,000 | 90,000 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | 125,000 | 44,000 |
| தனிச்சங்கள் | - | 100,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார மற்றும் பிற சென்மதிகள் | 135,000 | 25,200 |
| வங்கி மேலதிகப்பற்று | 60,000 | 10,800 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **1,245,000** | **570,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கையகப்படுத்தல் திகதியில் **கோமஸ் பீ.எல்.சீ.** இன் காணி தவிர்ந்த நிகரச் சொத்துக்களின் புத்தகப் பெறுமதியானது சீர் மதிப்பில் பிரதிபலித்தது. காணியின் சீர் மதிப்பு அதன் முன்கொணரற் தொகையை விட ரூபா 5,000,000/- உயர்வானதாக இருந்தது.

(2) கையகப்படுத்தல் திகதியில், கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் (NCI) சீர் மதிப்பு ரூபா 100 மில்லியனாக இருந்ததுடன் **கோமஸ் பீ.எல்.சீ.** இன் கைக்கொள் இலாபம் ரூபா 75,000,000/- ஆகக் காணப்பட்டது.

(3) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், **கோமஸ் பீ.எல்.சீ.** ஆனது **தோமஸ் பீ.எல்.சீ.** இடமிருந்து ரூபா 9,000,000/- பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்ததுடன், இந்தப் பொருள்களில் மூன்றிலொரு பகுதி (1/3) விற்பனை செய்யப்படாது 2023 மார்ச் 31 இல் **கோமஸ் பீ.எல்.சீ.** இன் வளாகத்தில் காணப்பட்டது. **தோமஸ் பீ.எல்.சீ.** இன் விற்பனைக் கொள்கையானது கிரயத்தில் 20% இலாப எல்லையைப் பேணுவதாகும்.

(4) **தோமஸ் பீ.எல்.சீ.** இனால் தனிச்சங்களில் செய்யப்பட்ட முதலீடானது **கோமஸ் பீ.எல்.சீ.** இனால் விநியோகிக்கப்பட்ட தனிச்சங்களை உள்ளடக்குகிறது.

(5) 2023 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்ட சேத இழப்புச் சோதனையானது **கோமஸ் பீ.எல்.சீ.** இன் கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பு ரூபா 10 மில்லியனால் சேத இழப்பு (impaired) அடைந்திருப்பதை வெளிப்படுத்தியது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **கோமஸ் பீ.எல்.சீ.** இன் கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்குக.** (09 புள்ளிகள்)

(மொத்தம் 13 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |